DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 2 /2025 |
| Deposition of witness | : | PW-2 |
| Name | : | ஆறுமுகம் |
| Father's /Husband Name | : | மீனாட்சிசுந்தரம் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 42 |
| Occupation | : | உணவக உரிமையாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 07th day July 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 6 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 9.30 மணியளவில் நான் எனது உணவகத்தின் பின்பக்கத்தில் இருந்தபோது பிரச்சனை நடந்தது அதைப்பற்றி எனக்கு தெரியாது. வந்து விசாரித்தபோது போலிசை அடித்துவிட்டதாக சொன்னார்கள். அது தொடர்பாக போலிசார் என்னை கடைக்கு வந்து விசாரித்தார்கள்.

(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் நன்னிலம் மடவிளாகத்தெருவில் அன்னை என்ற பெயரில் டிபன் கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரி எனது கடைக்கு சாப்பிடுவதற்கு வருவாற் என்றால் சரிதான். கடந்த 30.12.2024 ம் தேதி இரவு 09.00 மணிக்கு ஆஜர் எதிரி கடைக்கு வந்து சட்னி இலவசமாக கேட்டு சண்டை போட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு கேட்டு பிரச்சனை செய்தார் என்றும், ஆஜர் எதிரி எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக தற்போது பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பிரச்சனையை தடுத்து கேட்ட பேரளம் பெண் தலைமை காவலரை ஆஜர் எதிரி அடித்தார் என்றாலும் அதை மறைத்து நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேரன் என்றும் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி போலிசை கொன்றுவிடுவதாக கொலைமிரட்டல் விடுத்த விவரமும் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரியல்ல. எதிரியை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை**

இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.07.07 12:31:02 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 2 /2025 |
| Deposition of witness | : | PW-3 |
| Name | : | மகாலிங்கம் |
| Father's /Husband Name | : | குஞ்சுப்பிள்ளை |
| Village | : | மாப்பிள்ளைக்குப்பம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 60 |
| Occupation | : | உணவக ஊழியர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 07th day July 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள இடது கை பெருவிரல் ரேகை என்னுடையது தான். என்னுடைய இடது பெருவிரல் ரேகையை சுமார் நான்கைந்து மாதங்களுக்கு முன்னால் ஒரு நாள் சம்பவ இடத்திற்கு வந்து நன்னிலம் போலிசார் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 31.12.2024 ம் தேதி காலை 08.45 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமருகே நான் இருந்தபோது நன்னிலம் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை என் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், அதில் என்னை சாட்சியாக இருக்க சொன்னார் என்றும், பார்வை மகசரில் நான் எனது இடது கை பெருவிரல் ரேகையை வைத்தேன் என்றும், போலிசார் என்னை சாட்சியாக விசாரித்தார்கள் என்றும் போலிசார் விசாரிக்க வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை**

இல்லை.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.07.07 12:31:08 +0530